4331

மகர்த்மா காந்தியடிகளின்

# உபதேசம்.

(ஆன்மலாபம்.)

THE NEW UTHAYAN PUBLICATION (PVT) LTD
15, 2nd. LANE

இஃது

"தேசநேசன்" உபபத்திராதிபர்

குமரேச விஜயரத்தினமவர்கள்

எழுதியது.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை

கொழும்பு,

THE NEW UTHAYAN PUBLICATION (PVT) LTD
15, 2nd. LANE
POWER HOUSE ROAD
JAFFNA

கிரந்த சுதந்தரம்.
பதிவு செய்யப்பெற்றது
1—11—22

விலை சதம் 25.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

THE NEW UTHAYAN PUBLICATION (PVT)
15, 2nd. LANE
POWER HOUSE ROAD - JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாத்மா காந்தியடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE NEW UTHAYAN PUBLICATION (PVT) LTD.
15. 2nd. LANE
POWER HOUSE ROAD - JAFFNA

# முகவுரை

"எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவி தான் யாதினு மரிதரிதுகாண்" எனச் சிவஞானச்செல்வராகிய தாயுமான சுவாமிகள் சொல்லியிருப்பதுநாம் யாவருமறிந்தவிஷயம் கூன், குருடு, செவிடு, ஊமை, முதலிய குற்றங்கள் நீங்கிப் பிறத்தல் அதனினுமரிது. கல்வியறிவு, நல்லொழுக்கம், சீவகாருண்ணியம், தெய்வபக்தி ஆகிய நற்குணங்களமைந்துள்ள தாய்தந்தையரைப்பெறுதல் அதனினுமரிது உலகத்தின்கணுள்ள பற்பல மதங்கட்கெல்லாம் தாய்பதமாகி யஇந்துசமயம் செழித்தோங்கும் புண்ணியபூமியும் அப்பர், சுந்தரர், மாணிக்கர்,திருஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர், தாயுமானவர், பட்டினத்துப்பிள்ளையார், கௌதமரிஷி, இராமகிருஷ்ணர், சங்கராச்சாரியர் முதலிய ஞானிகள்; விவேகானந்தர். அபேதானந்தர்; சர்வானந்தர், பரமானந்தர், திரிகுணதீதர் முதலிய யோகிகள்; கோபாலகிருஷ்ணகோகலே, தாதாபாய்நௌரோஜி. பாலகங்காதரதிலகர் முதலிய தேசபக்தசிகாமணிகளாகிய இந்நன்மணிகளையெல்லாம் ஈன்றெடுத்த மாதாவுமாகிய பரதகண்டத்திற் பிறப்பது மற்றெல்லாவற்றினுமரிது. அக்கிரமும் அஞ்ஞானமுமதிகரித்துநீதிநெறிபுரண்டுநாம் அல்லோலப்படும்போதெல்லாம் எல்லாம்வல்ல இறைவன்எம்மீதுகொண்டிருக்கும் எல்லையில்லா அன்பினிமித்தம் இடையிடையே அவதாரபுருடர்களை யனுப்பி எம்மை யாட்கொண்டு வருகின்றார்.

இந்தியர்களாகிய நாம் ஐரோப்பிய நாகரீகமே பெரிதென்றெண்ணிக் கண்மூடித்தனமாய் அவற்றைப் பின்பற்றுவதையும் சாதியபிமானமென்பது சற்றுமில்லாது அவர்களுடைய உடைநடை முதலியவற்றைக் கற்பகவிருட்சக் கனியெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்றெண்ணித் தலைதடுமாறி நிற்பதையும் கொல்லாவிரதம் மற்றெல்லாவிரதத்தினுஞ் சிறந்ததென்று நாம் நன்கறிந்திருந்தும் இந்துசமய நூல்களிலே படித்திருந்தும் ஒருபிடிசாம்பருங்காணுதுமாய இவ்வுடம்பை வளர்க்கும்பொருட்டு ஊர்வன, பறப்பன, நடப்பனவாகிய உயிர்களைக் கொன்றுதின்றும் தாழ்ந்தசாதியாரை அதிகமாய்வருத்தியும், அவர்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்தும்; வஞ்சகம், பொறாமை, பொய், கள், காமம் ஆதிய பஞ்சமாபாதகங்கட்கு நாம் அடிமைப்பட்டிருப்பதையும் கண்ணுற்ற பரமேஸ்வரன் எம்மையெல்லாம்இந்நேரத்தில்காப்பாற்றும் பொருட்டு மகாத்மா காந்தியடிகளை அனுப்பியிருக்கிறுர்.இது கற்றறிந்தபல ஞானிகளின் கொள்கை:

ஆதலால் மகாத்மாவின் காலிற்தூசிற்குச் சமானமாகாத நாம் யாவரும் அவருடைய உபதேசங்களைப்படித்தல் அவசியமாம், ஆகவே உபதேசங்களிற்சிலவற்றை மொழிபெயர்த்துச் சிறுபுத்தகமாய்வெளியிட எண்ணங்கொண்டேன் கற்றறிந்தபெரியோர் அடியேனது பாஷைநடை முதலியனவற்றிற் காணப்படும் வழுஉக்களைப் பொருட்படுத்தாது குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர்கடன்என்றதற் கிணங்க மகாத்மாவின் உபதேசங்களைக் கவனித்து நெறியைக்கடைப்பிடித்தொழுகி ஆன்மலாபத்தைப் பெறவேண்டுகின்றேன்:

குமரேச விஜயரெத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# மகாத்மா காந்தியடிகளின் உபதேசம்.

(ஆன்மலாபம்)

## முதலாம் அத்தியாயம்.

## அறநெறி

மனமென்னும் வீட்டிற்கு இரண்டு வாயில்களுள்ளன. அவற்றிலொன்று ஒருவனெவ்விதமிருக்கின்றானென்பதைக் காட்டும், மற்றது அவனிருக்கவேண்டிய தெவ்விதமென்பதைக் காட்டும்; ஆகவே, இவ்வுலகின்கணுள்ள பலசாஸ்திரங்கள் உலகத்தின் தன்மையை மாத்திரங் காட்ட தருமசாஸ்திரம் உலகம் எவ்வாறிருத்தல் வேண்டுமென்பதைக் காட்டுவதாம் ஆதலால், ஒருவன் தானெவ்விதமிருக்கின்றானென்பதை நன்குணர்ந்து உடல் மனம் ஆன்மாவாகிய மூன்றையும் சுத்திகரித்து அநீதி ஆகாமியம் வீம்பு முதலியவைகளாலேற்படும் தீமைகளை விலக்க முயலல் வேண்டும். தரும சாஸ்திர போதனைகளைக் கற்றுக்கொள்ளுவதில் மாத்திரம் நில்லாது போதனைகளைப் பின்பற்றி யொழுகல் வேண்டும். அநேகர் தருமசாஸ்திரநீதிகள் பொதிந்துள்ள செய்யுட்களை மநநம் பண்ணினாலும் அவ்விஷயங்களி லுபந்நியாசித்தாலும் போதுமென் றெண்ணுகின்றனர். தருமசாஸ்திர விதிகளைக் கைக்கொண்டு தம்மைத் திருத்திக்கொள்ளும் சக்தியில்லாதவர் மானிட சொரூபம் பெற்றுள்ளவராயினும் உண்மையில் மானிடரல்லர். எத்துணை கஷ்டமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஷ்டமும் வந்தபோதினும் தருமத்தையும் சத்தியத்தையுங் கடைப்பிடித் தொழுகுவதி லின்புற்றிருத்தல்வேண்டும்.

கடவுள் சர்வ வல்லமையுள்ளவர். கடவுள் பரிபூரணசொரூபி அவருடைய நீதிக்கும் அன்பிற்கும்நாம் எல்லைகாண்டலரிது. அஃதங்ஙனமாயின், அவரைக் கைதொழும் நாம் தருமசாஸ்திர விதிகளை மீறிநடக்கத்துணிதல் எத்துணையறியாமை? உபகாரத்தையெதிர்பார்த்து அறநெறிபற்றியொழுகல் முற்றிலும தவறும். உலகவின்பங்களைப் பெறுவதற்காகத் தருமசாஸ்திரங்களைக் கைக்கொண்டுவருதல் தவறுதலால், கருணைக்கடலாகிய எம்பிரானிட்ட கட்டளைப்படி யொழுகல்முக்கிய கடமையென்றெண்ணவேண்டும். எமக்குதவி புரிவார்க்கு நாம் கடமைப்பட்டுள்ளோ மாயினும், பிறர் எம்மிடத்துதவி பெறும்போது அவர் எமக்குத்தருமஞ் செய்யத் தருணம் தந்தாராதலால் அவருக்கும் கடமைப்பட்டுள்ளே மென்றெண்ண வேண்டும். வீம்பினை விரும்புவா னொருவனும், பிறர் சந்மானம் விரும்புவானும் ஒழுக்கமற்றவராகின்றனர். புனிதம் ஞானம் விடாமுயற்சி முதலியவைகளில் ஒழுக்கம்தங்கியிருப்ப தென்றெண்ணுவது தவறு. ஒழுக்கமுள்ளானிடத்தி லிவைகாணப்படுமன்றி யிவைகளாலொருவன் ஒழுக்கமுள்ளவனுகான். உண்மையில் அறநெறிபிடித் தொழுகுவோன் அவ்வித வொழுக்கத்தாலெய்தும் பயனை யெதிர்பாராது ஒழுக்கத்தினின்றும் திறம்பாதிருப்பதே தன்னுடைய முக்கியகடமை யென்றெண்ணுவன்.

“ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப்படும்” (குறள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் அத்தியாயம்.

### இச்சை.

தற்கால மாந்தர் ஒழுக்கத்தி னுயர்வைப்பற்றிக் கொண்டிருக்குமபிப்பிராயம் முற்றிலும் தவறுனதாம் ஒழுக்கம் மாந்தர்க்கவசிய மற்றதென்றும், சமயத்திற்கும் நீதிநெறி பொருந்திய வொழுக்கத்திற்கும் சம்பந்தமில்லையென்றும் பலர்நினைக்கின்றனர். உண்மையைக் கூறுமிடத்து ஒழுக்கமில்லானிடத்தில் தெய்வபக்தி காண்டலரிது. ஆகவே, நன்னெறி கடைப்பிடித் தொழுகுவோர் தெய்வபக்தி யுள்ளாரென்றே கருதல் வேண்டும். தத்தம் தேயத்திற்காகத் தம்முயிரைத் தத்தஞ் செய்யப் பின்னிற்காதவரும் உயர்வு பொருந்திய வொழுக்க முடையாராகின்றனர். நீதிநெறி பற்றி யொழுகுவோர் முன்னோரால் விதிக்கப்பெற்ற முறைகளைக் கைக்கொள்ளுவ தல்லாமலும் தாமாகப் புதியவழிகளையறிந்து அவ்வழியே தாம் செல்லவும் பிறரை நடத்தவும் பின்னிற்கார். ஒருதேயத்தி னுயர்வும்தாழ்வும் அத்தேயத்துள்ளாருடைய வொழுக்கத்திற் றங்கியிருக்கின்றது.

மலபந்தத்திற் கடிமைப்பட்டாரிடத் திச்சையுண்டென்பார் பெரியோர். இச்சையே பிறவிக்குக் காரணம். இச்சை அவா வாஞ்சை யென்பன வொரு பொருட்சொற்கள். இச்சை இருவகையுடைத்து. தந்நயங்கருதிய விச்சையொன்றும், பிறர் நயங்கருதிய விச்சை மற்றதுமாம். தந்நயங் கருதிய விச்சையுள்ளான் நீதிநெறி பொருந்திய ஒழுக்கத்தினின்றும் திறம்பியவனுயினும், பிறர்க்கு நன்மை செய்யும் பொருட்டுத்தன்னைத் திருத்திக்கொள்ளு மவாவுடையனுயின் ஒழுக்கமுடையவ னுகின்றுன். தாம் பிறர்க்குச்செய்த நன்மைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைச் சொல்லிக் காட்டுவோரும் தம்மை மெச்சிக் கொள்வோரும்ஒழுக்கமில்லாதவராவர். வெகுளி பொய் முதலிய தீயகுணங்களையுடையார் நாசமடைவர், அவர்கள் குடும்பங்களும் அழிவெய்தும் பிறர்க்குநன்மை செய்யுங்குணம் எல்லாரிடத்தினுமுளது ஆயினும், சிலரினும்சிலரே அவ்வரிய குணத்தை விர்த்தி செய்கின்றனர். ஆதலின் இவ்வரிய மானிடயாக்கையைப்பெற்றிருக்கும்போது நாம் பிறர்க்கு நன்மைசெய்வதே முக்கிய கடமையென்றெண்ணி யிடைவிடாது முயற்சித்தல்வேண்டும் அதுவே நீதிநெறியாம். தந்நயங்கருதிய இச்சையை யொழிக்காது அதை விர்த்தியடையவிட்டால் தீமையன்றி நன்மை பயக்காதாம்.

## மூன்றும் அத்தியாயம்.

## உண்மையில் தருமமெது.

நாமெல்லாம் முன்னோரால் கையாடப்பெற்ற வழக்கங்களை அனுசரித்து வருகின்றோமன்றி ஒழுக்கமுள்ளது எது அல்லாதது எதுவென்று ஆராய்ந்து பார்த்துப் பின்பற்றுபவரல்லர். ஆயினும்,பலவிஷயங்களில் முன்னோர் வழக்கத்தைப் பின்பற்றுவதவசியமாம். ஏனெனின், ஒவ்வொருவரும் தத்தம்மனம்போன போக்கிற்கிணங்கநடந்துகொள்வாராயின் இவ்வுலகம் பிரசண்டமாருதத்திலகப்பட்டமரக்கலத்தின் கதியையடையும் ஆயினும், குருட்டுத்தனமாக வழக்கத்தைப்பின்பற்றுவது தருமமாகாது. யதேச்சையாகச் செய்யாத நற்கருமம் தருமநெறியைச் சார்ந்ததாகாது. தப்பிதஞ் செய்தானை மன்னிக்குமன்னவன் தருமநெறி கடைப்பிடித் தொழுகுபவனுயினும், அச்செய்தியைக்கொண்டு செல்லுங்கூலியன் தான் புரியும் அவ்வற்றொழிலால் தருமஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE NEW UTHAYAN PUBLICATION (PVT) LTD.
15, 2nd. LANE
POWER HOUSE ROAD • JAFFNA



செய்கின்றானல்லன். அப்படியல்லாது, தப்பிதஞ் செய்தானுக்கு அச்செய்தியை யறிவித்தல் தன்னுடைய முக்கிய கடமைகளிலொன்றென்றும் அவன்மீது இரக்கங்கொண்டு அப்பணியைச் செய்வனேல், குருட்டுத்தனமாகப் பணிசெய்வோனாகாது. தருமநெறிபற்றி யொழுகுவோனாகின்றான். ஆராயாது வழக்கத்தைப்பின்பற்றுவோன் நீதிநெறியின் தன்மையை யறியவாவது அதுபயக்கு நன்மையைப் பெறவாவது மாட்டான். எமக்கு முன்னிருந்த பல மகான்கள் பயனில்லா வழக்கங்களை விடுத்து தாமாகப் புதியவைகளைக் கண்டுபிடித்து உலகத்தோருக்கு முன்மாதிரி காட்டியிருக்கின்றனர் தன்மனச் சாட்சிக்கேற்ப உண்மை பேசவஞ்சுவோனும், மிடிவந்த காலத்துப் பொய் சொல்லித் தப்பிக்கொள்வோனும் ஒழுக்கமற்றவரும் தருமநெறியினின்றும் திறம்பியவருமாகின்றார். ஒருவனுடைய இருதயமே பரமேஸ்வரனுடைய ஆலயமென்றதையும் அதனின்று பிறக்கும் சப்தமாகிய மனச்சாட்சியே அப்பரம்பொருளுடைய சப்தமென்றதையும் அறிந்தவர் சிலரினுஞ் சிலரே. இதையறிந்து கொண்டால் இனியறியவேண்டிய ரகஸ்யமில்லை. இதுவே பரமரகஸ்யம்; இதையறிந்தோர் பாபச் செயல்களைக் கனவிலும் நினைக்கமாட்டார்.

இனி ஒருவனுடைய செய்கை நீதி நெறியைச்சார்ந்ததா அல்லவா வென்றறிய வேண்டின் செயல் புரிந்தோனின் நோக்கமென்னவென்பதை ஆராய்ந்தறிதல் வேண்டும். ஏனெனின் ஒரே செய்கை நன்மை தீமை யிரண்டையுமளிக்கும் பான்மையுடைத்திருக்கவுங் கூடும். உதாரணமாக, இருவர் ஏழைகட் கன்னமிடும் வழக்கமுள்ளாரெனினும், ஏழைகள்மீதுகொண்டவிரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தினாற் செய்தது தருமமாகவும் வீம்புக்காகச்செய்தது அதர்மமுமாகின்றது. ஆதலால் செய்கையின் பயனையடைந்தோரை ஆதாரமாகக்கொண்டு கருத்தாவின் ஒழுக்கத்தை யறியத்துணிதல் தவறாம் நாம் செய்யுந் தருமநெறி பொருந்திய முயற்சிகளின் பயன் எழிதிற்றோன்றாது. மேலும், நாம்செய்யும் நற்கருமங்களால் என்ன பயனையடைகின்றோமோ வென்றபேட்சித்திருத்தலும் தவறாம். தருமநெறிக்கொட்ப நடப்பது எங்கள் கடமையென்றும் அதற்கப்பாலுள்ளது இறைவனுடையது வென்றும் நினைத்தல் வேண்டும். நூற்றாண்டுகட்குமுன்னிருந்த அலெக்சாண்டரென்ற மன்னனுக்கு “பெரியவர்” என்னும் அம்மன்னன் சரித்திரமெழுதினோரீந்திருக்கின்றனர். உண்மையில் அம்மன்னன் அப்பட்டத்தை வகிக்கத் தகுந்தவனல்லன் ஆயினும். அவன் சென்றவிடமெல்லாம் கிரேக்கருடைய சீர்திருத்தத்தைப் பரவச்செய்து பிரசைகள் கல்விகற்றுக்கொள்ள வசதிகளுண்டுபண்ணிப் பலசாஸ்திரங்களைக் சற்பித்தானாயினும், இவையெல்லாம் தனக்குப் புகழையும், கண்ணியத்தையும் கொடுக்குமென்றெண்ணியே செய்தான் உலக நன்மையைக்கருதிச் செய்தவனல்லன். அவனைச் சுத்தவீரனென்றும் அரசுமுறைதெரிந்த மன்னனென்றும் சொல்லுவதேயன்றித் தருமநெறி பற்றியொழுகியவனென்று சொல்வது தவறாகும்.

பிறராற் தூண்டப்பட்டுச் செய்யப்படுவன தருமநெறியைச் சார்ந்தனவாகா, நாமாகவுணர்ந்து செய்யவேண்டும். உதாரணமாக, ஒருவன் காலையில் சூரியோதயத்திற்கு முன்னெழுந்துகொள்ளும் வழக்கமுள்ளானாயினும் அவ்விதம் அதிகாலையி லெழுவது தன் உத்தியோக ஸ்தலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குக் குறித்த நேரத்துட் போகாவிட்டால் வகித்திருக்கும் உத்தியோகம் பறிபோய்விடுமென்றஞ்சியதாலானால் அவன் ஒழுக்கமுடையானன்று. இடம்பத்தையொழித்து வறுமை விரதமனுட்டிப்பதே சிறந்த தருமமாயினும், ஒருவன் தன்னிடத்துச்செல்வ மில்லாததாற்றான் விரதமனுட்டிக்கின்றானாயின் அதுவும் தருமமன்று. இன்னொருவன் தன்னிடத்துப் பாரிய செல்வமிருந்தும் அநேகர் வறுமைப்பிணியால் வருந்தத் தாம் டம்பமாகச்சீவித்தல் பாபமென்றெண்ணி வறுமைவிரதத்தை யனுட்டிப்பானாயின் அவனே தருமநெறி கடைப்பிடித் தொழுகுவோனாவான். அதுபோலவே எசமானொருவன் தன்னிடத்துள்ள ஏவலாளர் தன்னிடத்தை விட்டகன்றிடுவரென்றஞ்சி அவர்கட்கு வேதனத்தைக் கூட்டிக் கொடுப்பானாயின் அதுவும் தருமமாகாது. அல்லாமல் ஏவலாளருடைய உதவியைக் கொண்டு தான்சம்பாதிக்கும் பொருளை நியாயமாக பங்கிட்டுக்கொடுப்பது நீதியென்றெண்ணி ஏவலாளர் வேதனத்தைக் கூட்டுவனேல் அதுவே தருமமாம். உலகத்தோர் மெச்ச அல்லது எதிரிக்கஞ்சிப் பொருளீட்டல் ஒருபோதும் தருமமாகாதாம்.

ஆகவே, நற்பயனையளிக்கும் செய்கைகளும் தந்நலங்கருதிச் செய்யப்பட்டால் உபயோகமற்றவைகளாகிச் செய்தவர்க்கு உறுதிப்பயனளிக்கும் தத்துவமுமிளந்து நிற்குமாம். தண்டனைக்கஞ்சிப் பொய் சொல்லாதானொருவனும் சிறைவாசத்திற்கஞ்சிக் களவு செய்யாதானொருவனும் தப்பிதஞ் செய்யாதவர்களாயினும் தருமநெறிபற்றி யொழுகுகின்றவரல்லர். எம்மிடத்திலுள்ள அன்பு தெய்வத்தன்மை பொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தியதாயினும் தந்நயங்கருதியவாகிய நோக்கங்கொண்டு பிறரிடத்தன்பு வைப்போமாலுல் அது உண்மையான அன்பாகாது, அதுபற்றியே ஷேக்ஸ்பியர் மகாகவியும் "மாற்முற்றல் கண்டு மாறிடுமன்பு அன்பல்லவென்ருர்" மெய்யன்பு மாருததன்மையும் பொய்யன்பு மாறக்கூடியதுமாம். உண்மையான தெய்வபக்தியெது உண்மையான அன்பு எதுவென்பதை நாமாராயவேண்டிய தவசியம். மெய்யன்பில்லாணிடத்தில் உண்மையான தெய்வபக்தி காண்டலரிது. ஆதலால், பிறரிடத்தாயினும் கடவுளிடத்தாயினு முபகாரங்கருதாது மெய்யன்பு வைத்தல் வேண்டும். பிறரிடத்தன்பில்லான் பாபியாவான்.

இதுபற்றியே தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் "அன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையா ரென்புமுரியர் பிறர்க்கு" என்ருர். தனக்கு நல்ல பதவி கிடைக்கும் பொருட்டு மாத்திரம் ஒருவன் கடவுளைப் பூசிப்பானுயின் அவனிடத்துள்ள அன்பு பொய்யன்பாகின்றது, உண்மையை விரும்பி உண்மை பேசுவதும் ஒழுக்கத்தை விரும்பித் தருமநெறியைக் கடைப்பிடித்தொழுகலும், அன்பேயுருவாகிய பரம்பொருளை மெய்யன்பினுற் பூசிப்பதும், பிறரிடத்தன்பு வைப்பதும் எங்கள் முக்கிய கடமையென்றும் நினைத்துக் கொள்ளல் வேண்டும். ஒருவன் தனதாப்த நண்பர்களிடத் துண்மை பேசி மாற்ருனிடத்துப் பொய் பேசுவானுயின் அவன் அறிவுடையோரால் எள்ளப்படுவான் பெற்ருருக்காயினும் உற்ருருக்காயினும் உறவினருக்காயினும் மாற்ருனுக்காயினும் மற்றெவருக்காயினும் உண்மையே பேசப் பழகல்வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். புகழை விரும்பிச் சத்தியத்தைக்கடைப் பிடித்தல் ஒழுக்கமாகாது. ஒருவன் நன்னோக்கத்துடன் ஒன்றைச் செய்தானாயினும் அவன் அந்நோக்கம் எதற்காகக் கொண்டானென்பதை ஆராய்ந்தறிந்தே அவன் ஒழுக்கமுடையானா அல்லவா வென்பதைச் சொல்லத்துணிதல் வேண்டும் ஆராய்ந்தறியாது அபிப்பிராயத்தைச் சொல்லுவது ஒழுக்கத்தினின்று திறம்பலாகும். ஒவ்வொருவரும் இப்பிரமாணத்தைக் கைக்கொண்டுவருதல் நன்று.

---

## நான்காம் அத்தியாயம்.

## தெய்வபக்தியும் தருமநெறியும்.

தெய்வபக்தியும் தருமமும், ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்கக்கூடாதென்று முதலத்தியாயத்திலே சொல்லியிருப்பதை வாசகர்கள் அறிவர். ஆயினும் இவ்வத்தியாயத்தி லவ்விஷயத்தை நனகு விளக்கிக்காட்ட வெண்ணங்கொண்டாம். நல்லொழுக்கத்திற்கும் தெய்வ பக்திக்கும் சம்பந்தம் யாதுமில்லையென்று பலர் நினைத்துக்கொள்கின்றனர் ஆதலால் உண்மையை விளக்கிக்காட்டுவது என்னுடைய கடமையாம்.

உதாரணமாக, அக்கிரமச் செயல்களைச்செய்வதே தொழிலாகக்கொண்ட வநேகர் தாம் தெய்வபக்தி யுள்ளாரென்று வாய்ப்பறையறைவது நாம் யாவருமறிந்த விஷயம். இன்னும் ஒருவகுப்பார் தருமநெறிபற்றி யொழுகுபவராயிருந்தும் கடவுள் ஒருவரிருக்கின்றாரென்பதை மறுப்பதில் களிப்புற்றிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு வகுப்பினருடைய அபிப்பிராயங்களும் முற்றிலும் தவறானவையாம். மேலும், முதல் வகுப்பினர் போலித் தெய்வபக்தி யென்னும் அங்கியால் தம்முடைய ஒழுக்கமற்ற செய்கைகளைப் பிறர் கண்டு கொள்ளாவண்ணம் மறைக்கின்றனர்; அதனால் பொது ஜனங்கள் ஏமாற்றப்பட்டுப் போகின்றனர். தெய்வபக்தியில்லானிடத்து உயர்வு பொருந்திய வொழுக்கமும் காண்டலரிது.

பூர்வீகத்தில் மாந்தர் ஆன்மலாபத்தைக் கருதியவராக விருந்தனர். அதாவது பரோபகார சிந்தையாய் பிறர்க்கு நேர்ந்த கஷ்டநஷ்டங்களைத் தமக்கு நேர்ந்ததுபோல வெண்ணி அவைகளை விலக்கி ஒற்றுமையாக வாழ்ந்தனர். தர்மம் அதர்மத்தையும், மெய் பொய்யையும், புண்ணியம் பாபத்தையும் வெல்லக்கூடிய சக்தியுள்ளதென்பதை நன்கு உணர்ந்திருந்தனர். மன்னுயிரைத் தன்னுயிரென்றெண்ணி நடப்பவன் தெய்வபக்தியிற் சிறந்தவனென்று நாம் விவரித்துக் கூறவும் வேண்டுமா? ஆனால், தற்கால மாந்தர் கஷ்டம் வந்தபோதன்றி எல்லாசௌகரியத்துடனும் வாழும்போது கடவுளை நினைக்கின்றாரில்லை. கஷ்டம் யாதாயினும் ஏற்பட்டு விட்டாலோ கூவிக் கூத்தாடிக்கடவுளைப் பூசிக்கின்றனர்! இதுவே போலிப்பக்தி. ஆனாலும், மானுடர் யாவரும் உண்மையான பக்தியெது வென்பதை யறியுங்காலம் வாராமற் போவதில்லை. அப்போ கஷ்ட நஷ்டங்களைக் கவனிக்காமல் சத்தியத்தையும் தரும நெறியையும் கடைப்பிடித்தொழுகி நற்கதி யடைவர்.

பிறருக்குத் தீங்குவிளைப்பதால் நாம் சொற்பலாபமடைந்தபோதிலும், அது பாபப்பற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுள்ளதென்பதையும், நாம் பிறருக்குச் செய்த தீங்கு நம்மைத் தேடிவருமென்பதையும், பிறருக்குத் தீங்கு விளைப்பதாலேற்படும் சந்துஷ்டி நிலைக்காத தென்றதையும் ஒவ்வொருவரும் உணர்ந்தால் பாபத்தை மனத்தினுலுமெண்ண மாட்டார்கள். "ஒருவன் தன் ஆத்மாவை யிழந்து உலகமுழுவதையுமாதாயப்படுத்திக்கொண்டாலும் அவன் பெறும் லாபமென்ன." வாலிபர் சங்கங்களில் பல அரிய உபந்நியாசங்களால் ஒழுக்கத்தினுயர்வை யெடுத்துக்காட்டிப் போதகம் செய்த "விஸ்மாக்" என்னும் ஜேர்மனி தேசத்து மந்திரி சொல்லொணு நெறி தப்பிய செயல்களைச் செய்வித்தும் தாம் செய்தும் அத்தேசத்துச் செல்வத்தைப் பெருக்கவும் அரசின் கௌரவத்தைக் கூட்டவும் பிரயாசப்பட்டாரே! இவர் ஒழுக்கத்தைப் பற்றி நன்கு அறிந்திருந்தும் தாம் பிறருக்குபதேசம் செய்தவழியிற் தம்மை நடத்திக்கொள்ள வில்லையே அந்தோ! இவரிடத்துக் கடுகளவேனும் தெய்வபக்தி யில்லையென்பது யாவருக்கும் தெள்ளிதிற் புலப்படும். ஒழுக்கமாகிய வித்துக்குத் தெய்வ பக்தியெனும் நீர் பாய்ச்சாவிட்டால் அது முளைப்பதரிது அப்படிக்கின்றி முளைத்தால் "தன்நயம்" என்ற விஷப்பூச்சி முளையை அடியோடு வெட்டிவிடும். ஆகவே, தெய்வபக்தியினின்று பிரிக்கப்பட்ட தருமம் உபயோகமற்றதாம்.

தருமநெறியை வியந்து கூருத சமயங்களும், சமயகுரவருமில்லை. எல்லாச் சமயங்களும் ஒழுக்கத்தையே முதல் விர்த்தி செய்யும்படி போதிக்கின்றன தெய்வ பக்தியாகிய மாளிகைக்கு அஸ்திவாரமாகவுள்ளது ஒழுக்கம், சத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியத்திற்கும் நீதிக்கும் மாறான சமயங்களொ ன்றுமில்லை. சுலோகங்களைச் சொல்லிக்கொண்டு பாவம் செய்தால் பகவான் எம்மைத்தண்டிக் காது விட்டுவிடுவாரா? இல்லை நெறி தப்பி யொழுகுபவனொருவன் கடவுளொருவ ரிருக் கிறாரென்பதைப் பூரணமாக நம்பினும், கட வுளிருக்கிறாரென்ற விஷயத்தையறியாத இன் னொருவன் அறநெறிபற்றி யொழுகுவானானல் அவனே உண்மையான பக்தனாகின்றான். பக வானைச் சேரும் வழியைத் தவறவிட்டு நடப் பவன் கருணைக்கடலாகிய இறைவனிருப்பதை யறிந்தென்ன அறியாதிருந்தென்ன? இவர்க ளே மானிடப்பதர்களாம். வாயால் மாத்திரம் பூசிப்பவர்கள் நிரீச்சுரவாதிகளிலும் கீழ்மக்க ளாம். ஒழுக்கமும், தெய்வபக்தியும் ஒன்றல் லாது இரண்டல்ல.

குறிப்பு:—

மன்னுயிரையும் தன்னுயிர் போல வெண் ணிநடக்கும் திறமையை நாம் பெற்றுக்கொண் டால் தெய்வபக்தி தாமாக வந்துசேரும். மே லும், நாம் செய்வதொவ்வொன்றும், நன்மை பயக்கக் கூடியதானலும் சரி தீமை பயக்கக்கூ டியதானலும் சரி எம்மைப் பாதிக்காது போ வதில்லை, இது இயற்கையாம். ஆதலால் நாம் பிறரைத் துன்பப்படுத்தினல் அத்துன்பம் மீண்டும் எம்மிடத்து வந்து எம்மைத் துன்பத் திற்குள்ளாகச் செய்யும், நன்மை செய்தால் மீண்டும் எமக்கு நன்மையே பயக்கும். உண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையான தெய்வபக்தியென்பது அன்பே சொரூபமாயுள்ள கடவுளை நாம் மெய்யன்புகொண்டு பூசித்தலாம். ரூபலாவண்ணியமுள்ள சேயைப் பெற்ற தாய் அதைப்பார்க்கும்போதும் அதன் வாயினின்று மழலைச் சொற்கள் பிறப்படும்போதும், அவள் ஆனந்தசாகரத தமிழ்ந்தி யெவ்விதம் தன்சேயை மார்போடணைத்து முத்தமிட்டுக் கூத்தாடுவாளோ அதுபோலவே நாமும் பரிபூரண வஸ்துவாகிய பரம்பொருளை மெய்யன்புடன் பூசிக்கவேண்டும். தாயானவள் தன் சேயை முத்தமிட்டு ஆனந்திக்கும்போது தான் யாது நன்மையையும் அச்சிறு குழவியிடம் பெறவெண்ணுதிருப்பது போலவே நாமும் பகவானைப் பூசிக்கும்போது அவர்மீது கொண்ட அன்பு மிகுதியாற் பூசிப்பதன்றி ஒன்றையேனும் கருதியவராய்ப் பூசிப்பதாகாது. அன்றேல், அது உண்மையான பக்தியல்ல. மெய்யன்பு இல்லாவிட்டால் உண்மையான பக்தியுமில்லை. தந்நயங்கருதியவன்பு சீவராசிகள்மீதும் மெய்யன் புள்ளவனுகவே யிருப்பான். இதுவே உண்மையான தெய்வபக்தியினிரகசியம்.

## ஐந்தாம் அத்தியாயம்.

இயற்கையிலே ஒரு செய்கையில் நன்மை தீமையறிவதற்கு அஃது தருமநெறியோடொத்திருக்கின்றதாவென்று பார்க்கின்றோம். ஒரு செய்கையை நல்லது அல்லது கெட்டதுவென்று சொல்லும்போதும் அச்செய்கையா லெய்திய பயனையாராய்ந்தே சொல்கின்றோம். இவ்வழிதவறுனதாயினும் மனுஷசுபாபத்திலேயுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளதாம். ஒருவன் இன்னொருவனுக்குத் தீங்கு செய்வதை நாம் காணும்போது தீங்கு செய்தானை மனத்திலால் முனிகின்றோம். உண்மையில் எமக்கொரு து[illegible]பமும் விளைந்ததில்லையாயினும் தீயசெயல்களை எங்கள் மனச்சாட்சி வெறுக்கின்றது. மேலும், எங்களுடைய ஆப்தநண்பர் தாமும் தீய செயல்களைச் செய்தால் எங்கட்கிடையிலுள்ள அன்னியோன்னியத்தைத் மறந்தவராக அந்நண்பர் செய்தது தப்பிதமென்றே மனத்தி லெண்ணுகின்றோம். தீய செயல்களால் நாம் நன்மையைப் பெற்ற போதிலும் அவைகள் தீயனவென்றதை யுணராமலிருக்க முடியாது. ஆகவே, செய்கைகள் அறநெறியைச் சார்ந்திருப்பதா அல்லவா வென்பதை எங்களிடத்துள்ள விருப்பு வெறுப்பால் நியமித்தல் முடியாத காரியமாம் ஏனெனில், பலமுறைகளில் எங்களநுதாபம் தரும நெறிக்கு முற்றிலும்மாறாகவே நிற்கின்றது உதாரணமாக தாய் தன்சேய்மீதுகொண்ட வன்பினால் அதற்குத்தீங்கு விளைக்கக்கூடிய பதார்த்தத்தைக்கொடுக்க ஆவல் கொண்டிருந்தாலும், அவற்றால் நேரிடும் தீங்கை நன்கு அறிந்திருந்தும் கொடுப்பாளாகில் அவள் ஒழுக்கமற்றவளாகின்றாள் அறநெறி பற்றி யொழுகாதவருடைய வன்பு சிலவேளைகளில் விஷமாகியும்போம்.

தருமநெறி யென்றுமுள்ளது, எங்குமுள்ளது, எச்சாதியார்க்குமுள்ளது. நாம் விழித்திருக்கும்போது சூரியனைக்காண்கவும் கண்ணைமுடியபோது காணதிருக்கவும் நேருவதினால் சூரியன் நிலையினின்று மாறிவிட்டதென்று சொல்வது தவறுதல் போல நாம் தருமசஸ்

திர நீதிகளைக் கைக்கொள்ளாது நடப்பது காரணமாக உலகத்தில் தருமநெறியில்லை யென்று நினைத்துக்கொள்ளல் அறியாமையினு மறியாமையாம். அநேகருடைய ஊனக்கண் ஞானக்கண் ஆகிய இவ்விரண்டும் தந்நயமென்ற பாசியால் மூடப்பட்டிருப்பதால் அதர்மத்தை தருமமென்றும், பாவத்தைப் புண்ணியமென்றும், தீமையை நன்மையென்றும், பொய்யை மெய்யென்றும், ஒழுக்கமற்றதை ஒழுக்கமுள்ள தென்றும், நினைத்துக்கொள்கின்றனர். ஆயினும், உலகத்தோர் தந்நயமென்ற பிசாசை யொழித்துப் பரோபகாரக் குணத்தை விர்த்தியாக்கி நல்லவர்களாயொழுகுங்காலமும். வரும் வெகுகாலமாகப் பண்டிதர்கள் உலகத்தின் வெளித்தோற்றத்திற்குரிய சாஸ்திரங்களை ஆராய்வதில் வாழ்நாளை வீணாக்குகின்றரன்றி மாந்தர்க்குறுதிப் பயனைக் கொடுக்கும் தருமசாஸ்திர விதிகளையும், அவற்றின் விசேடங்களையுமாராய்ந்து பார்க்கின்றாரல்லர். அந்தோ! இவர்கள் ஆன்ம லாபத்தைத் தேடுவதிலேன் இத்துணை பரா்முகமாக விருக்க வேண்டும். அரசனிட்ட கட்டளைகளைச் சிரத்தையோடு கைக்கொள்ளு நாம், கடவுளிட்ட கட்டளைகளாகிய தருமசாஸ்திர விதிகளையேன் சிரத்தையோடு கைக்கொண்டு வரப்படாது? அரசனிட்ட கட்டளையை மீறுவதினால் சொற்ப தண்டனையை மாத்திரமடைகின்றோம். சர்வ வல்லமையுள்ள கருணாநிதியின் கட்டளையை மீறி நடப்பதால் வர்ணிக்கக் கூடாத தண்டனையை யடையவேண்டி வரும்!

ஆயினும் அரசனிட்ட கட்டளைகள், அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய பரமேஸ்வரனிட்ட கட்டளைகளாகிய தருமசாஸ்திரங்கட்கு மாறுபடுமானால், அரசனிட்ட கட்டளைகளை மீறவேண்டியதவசியமாம். அரசனிட்ட கட்டளைகட்கும் தருமசாத்திரங்கட்குமுள்ள தூரம் அளவிடப்படாததாம். ஏனெனின், தருமசாத்திரவிதிகள் ஆன்மலாபத்தைக் கருதியவையாம்.

உண்மை எல்லாரிடத்துமுள்ளது.

அக்கிரமச்செயல்களிற் பிரவேசிப்பவரும் தாம் செய்வது தப்பிதமென்றறியாதவரல்லர். மேலும், ஒழுக்கமற்றவரும் தம்மை ஒழுக்கமுள்ளவரென்று சொல்லிக்கொள்வதில் வாஞ்சையுள்ளவராதலால் ஒழுக்கம் சிறந்ததென்பது நன்கு விளங்கும். எச்சாதியாராயினும், எத்தேசத்தாராயினும கடவுளிட்ட கட்டளையை மீறுவதாலேற்படும் தண்டனையை விலக்கிக்கொள்ள மாட்டார்கள். திருடன் தன்னையே திருடுகிறான், வஞ்சகன் தன்னையே வஞ்சிக்கிறான் அநீதியும் அக்கிரமும் ஆரம்பத்தில் வெற்றிக்கொடியை நாட்டினாலும் நீதி தப்பி நடப்பவர் சீக்கிரத்தில் நாசமடைவர். அக்கிரமத்தாலேயே அசீரியா தேசமும் பபிலோனியாவும் நாசமடைந்தன, கிறேக்க தேசமும் ரோமாபுரியும் அக்கிரமத்தால் பாழடைந்தன. கொடுங்கோலரசை வெறுத்தே பிரான்ஸ் தேசத்தில் பாரிய குழப்பம் நேர்ந்தது. எவனாயினும் அறநெறிபற்றி ஒழுகுவானாயின் அவன் நல்ல பதவியையடைவான். அவன் குடும்பங்களும் நற்கதியடையும். நீதி தவறாதவர்க்குச் சமாதானமும் சுதந்தரமும் சந்தோஷமும் எக்காலமுண்டு. அவர்களைப் பகவான் கைவிடமாட்டார். அவர்கள் நாடும் மேன்மையடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:—

மகாத்மா காந்தியடிகளின் உபதேசங்களைப் பின்பற்றி வருவதால் நாமாத்திரம் க்ஷேமமடைவதல்லாமல் எங்கள் நாடும் க்ஷேயமடையும். ஆதலால் யாவரும் அறநெறி கடைப்பிடித் தொழுகுதல் அத்தியாவசியமாம். உதாரணமாக ஓர் குறிச்சியில் ஒருவனைப் பிடித்த வைசூரி நோய் நாட்செல்ல நாட்செல்ல ஊரூராய்த் திரிந்து எங்கும் பரவுவது போலவே அநீதியும் அக்கிரமமும் பரவுகின்றது. ஒருவன் நல்லவனுனல் அவனிடத்துநின்று வெளிப்பாயும் காந்தசக்தி பரிசுத்தமானதால் பலர் நல்லோராகின்றனர்.

வைசூரி வந்தவுடன் அதனுலுயிருக்கீனம் வருமோ அல்லது அங்கலட்சணம் பங்கமடையுமோ வென்றஞ்சி செய்யாத வைத்தியங்களெல்லாம் செய்யும் நாம், ஆன்மலாபத்தைத் தடை செய்வதும் அவ்வான்மாவிற் குள்ள தெய்வ சொரூபத்தைப் பங்கம் செய்வதுமான தீய குணங்களை நீக்க முயற்சிப்படாதிருப்பது எத்துணையறியாமை. குடலிலழுக் குள்ளவன் பேதி குடிக்கப்பயந்தால் முடியுமா? நாட்செல்ல விட்டால் வருங்கதியாது?

குடலிலுள்ள பழைய மலக்கட்டை வெளியாக்கா விட்டால் வருவது கொடிய நோய். நோய்வந்தபின் பேதிமருந்து குடித்தும் பயனில்லை: மற் போகவுங்கூடும். ஏற்கெனவே மருந்தை யுட்கொண்டிருந்தால் எவ்வளவு லாபமுண்டு அது போலவே நாம் உலக போகங்களின் மீதுள்ள ஆசையை நிறுத்த முடியாமலிருப்பதால் ஆன்மாவைப் பற்றி யிருக்குமழுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக் கழுவாது ஈற்றில் தாழ்ந்த பிறப்பைப் பெற்று வருந்துவதிலும் பார்க்க பெறற்கரிய இம்மானிட யாக்கையைப்பெற்றிருக்கும்போதே தரும சாஸ்திர விதிகளாகிய அவுடதங்களை யுட்கொண்டு பல பிறப்புக்களைப் பெற்றுப் பிறந்து பிறந்து கஷ்டப்படுவதை நீக்கவொண் ணுதா? நித்திரையிற் கண்ட சொற்பனங்கள் போன்ற சுக போகங்களால் நாம் பெறும்பயன் யாது? கிரீட மணிந்த மன்னவரும் மாண்ட பின்ன ரென்செய்வார்? தீர வீரச்செயல்களைச் செய்து முடித்த நப்போலிய னெங்கே? உலக முழுவதையும் தன்னுடைய குடைக் கீழாக்க வெண்ணி நாற்பதுவருடகாலமாக யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து ஈற்றில் பின் காட்டிய ஜேர்மன் சக்ரவர்த்தியாம் கெயிசரெங் கே? தான் செய்த ஆயத்தங்களும் புரிந்த போரும் இப்போ இம்மன்னனுக்குக் கனவாகத் தோன்றுமல்லவா? ஆதலால் சித்துப்பொரு ளாகிய ஆன்மாவைக் கவனிக்காது அசித்துப் பொருள்களில் நாம் வீண் நேரம் செலவுசெய் வது எவ்வளவு புத்தியீனம்? இவ்வுலகமே அநித்தியம், கூட கோபுரங்களு மநித்தியம், ஐஸ்வரியம் நித்தியம், கௌரவப் பட்டங்கள் அநித்தியம், உத்தியோகமும் அதனுலேற்படும் கர்வமு மநித்தியம, பெண்டீர் பிள்ளை அநித் தியம், ஆன்மாவும் கடவுளுமே நித்தியம். கடவுளைச் சேரக்கூடியது ஆன்மா வொன்று மாத்திரமே. பாபப்பற்றுள்ள வான்மா கடவு ளைச்சேர முடியவேமுடியாது. ஆதலால் ஆன் மாவைப் பற்றியுள்ள பழைய மலக்கட்டையும் புதிய மலப்பற்றையும் முற்றிலும் நீக்கிணு லன்றி நாம் நற்கதியடைவது முடியவே முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது. ஆதலால், யாவரும் உலகவின்பங்களைச் சிறிது சிறிதாகக் குறைத்து வருதல் அவசிய மாம். (கு. வி.)

## ஆறும்—அத்தியாயம்

### தன்னைத் தானடக்கி யாளுதல்.

நீதியானவற்றைச் சுவேச்சையாகவும் சீர்தூக்கிப் பார்த்தும் செய்பவரே ஒழுக்கமுடையவராவர். அங்குமிங்குமலைந்து கொண்டே நிற்கும் மனமென்னும் குரங்கினைவல்கட் கிடங்கொடாது நீதியென்று தாம் நம்பிக்கொண்டவழியிற் செல்பவரே மனுஷத்தன்மை யுடையவரார். மனதை யடக்கும் சக்தி எல்லாரிடத்துமில்லாததால் காலத்துக்குத்தக்க கோலம் பூண்டு நடக்கின்றனர் உலகத்தோடொட்ட வொழுகுதல் அவசியமாயினும், நெறிதப்பி யொழுகப்படாது பிறருடைய அவமதிப்பிற்கஞ்சியும் முகமனை விரும்பியும் பலர் நெறிதப்பி யொழுகுகின்றனர், ஆனது பற்றியே டார்வின் என்னும் சாஸ்திர விற்பன்னரும் தகுதியுள்ளவையை யொழிந்த மற்றவை அழிந்து போவன என்றார். சீவராசிகளெல்லாம் தம்மைத் தாமே பேணிக்கொள்வதற் காகப் பிறந்தநாட் தொட்டிறக்கும் வரையும் இடைவிடா முயற்சியிலாழ்ந்திருந்து, தத்துவமுடையவை யிருக்கத் தத்துவமிழந்தவை அழிவெய்துகின்றன. இதுவே மேற்கூறப்பட்ட சாஸ்திர விற்பன்னரினபிப்பிராயம். அவ்விதம் கூறியிருப்பதால் தத்துவ மெனப்படுவது ஸ்தூலவுடம்பின் தத்வமென்றும் பலர் கருதுகின்றனர். அஃது முற்றிலும் தவறும். ஆகவே, மனுஷனோடு சம்பந்தப்பட்ட கருமங்களுக்கும், ஒழுக்கத்திற்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பில்லை யென்று நினைத்துக்கொள்வதும் தவறும். எங்ஙனமெனின் மேற்கூறிய சாஸ்திரியார்தாமும் ஒழுக்கத்திற்கும் இவ்வுலகவாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண் டென்றார். அஃது உண்மையே. காட்டு மிருகங்களாகிய காடி, புலி, சிங்கம், முதலியவற்றினும் மனுஷன் பலத்திற் குறைந்தவனாயினும், தன்னிடத்துள்ள புத்திக்கூர்மையி னாலல்லவா அக்கொடிய மிருகங்களை யடக்கியாண்டு வருகின்றான்? அதுபோலவே மனுஷருக்குள்ளும் விவகாரம் நேர்ந்தால் சனத்தொகையிற் கூடிய கட்சி வெற்றியடையுமென் றெண்ணுவது அறியாமையாம். புத்திமான் பெலவானாவான். புயபராக்கிரமத்தை நுட்பபுத்தி வெல்லுவதுபோல அறநெறிபற்றி யொழுகுவதாலுண்டாகும் தைரியம் புயபராக்கிரமத்தையும் வெல்லும் ஆதலான், ஒழுக்கமுடையா னொருவனுக்கு எவரும் அஞ்சி நிற்பர். சத்தியமும், நீதியும், என்றென்றைக்கும் வெற்றிபெற்று நிற்கும். பொய்யும் அநீதியும் சொற்ப காலத்திற்கு அநுகூலமடைந் திருந்தாலும், ஈற்றில் நாசமுறும்.

ஒழுக்கத்தினுயர்வைப் பற்றி விளக்கிக் காட்ட தற்காலத்தும் அநேக அத்தாட்சிகளுண்டு. ஒழுக்கத்திற்கு அவசியம் வேண்டியது தாழ்மை அகங்காரமும் பெருமையுமுள்ளவர்கள் சொல்லொணாக் கஷ்டங்களை யனுபவிப்பர். சுகபோகங்களையும் துன்மார்க்கத்தையும் வெறுத்துநிற்றல் ஒழுக்கமுடைமையாம்.

வெறிப்பதார்த்தங்களைப் பற்றி நுட்பமாக ஆராயும்போது இங்கிலாந்து தேசத்தவர்களிற் பெரும்பாலார் அகால மரணமடை கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரென்றும் முப்பது வயது வரையில் லாகிரி வஸ்துக்களை யுபயோகிக்கப் பழகிக்கொள்பவர் ஐம்பது வயதிற்குள்ளாக மாணமடைகின்றன ரென்றும், லாகிரி வஸ்துக்கள் உபயோகிக்காத வரும், துன்மார்க்க விஷயங்களிற் பிரவேசிக் காதவரும் எழுபதுவயதிற்கு மேலாகச் சீவிக் கின்றனரென்றும் வைத்தியர் சங்கத்து விஷய சங்கிரகங்களா லறியலாகும். இனி காமவெறி கொண்டுவியபிசாரம் செய்பவரும், அகாலமர ணமடைகின்றனர். அவர்கள் பிள்ளைகளும் நோய் வாய்ப்பட்டழுந்தி பெலங்குறைந்தவரா யிருந்து ஈற்றில் தம்பெற்றோர் கதியையடை கின்றனர். நெறிதப்பி யொழுகுபவர்கட்குப் பல விததீமைகள் வந்துசேரும். உதாரணாக, அந்த மான் தீவிலுள்ள ஆடவர் தம்மனைவியர் முதற் பிள்ளை பெற்றதும் அவர்களுடன் சேர்க்கையை முற்றிலும் நீக்கிவிடுகின்றனர்; இது ஒழுக் கத்திற்கும் இயற்கைக்கும் மாறுதலால் அத்தீ வின் குடிசனத்தொகை நாளடைவிற் குறைந்து குறைந்து வருகின்றது.

மிருகங்களிடத்தும் ஒழுக்கமுண்டாவென் று சிலர் வினவவுங்கூடும். மிக்க கோழைத்த னமுள்ள மிருகங்களும் தமது இளங்கன்று கட்குத் துன்பம் நேர்ந்த காலத்து தம்முயி ரையும்பேணுது அவ்வபாயத்தை நீக்கமுயலு கின்றன வல்லவா? ஆகவே, மிருகங்களிடத் தும் கடுகளவேனும் ஒழுக்க மிருக்கின்றதென் பதற் காட்சேபனையில்லை: ஆனல், மனுஷவர்க் கம் எல்லாவற்றினு முயர்ந்ததென்று சொல்வ தற்கு மனுஷரிடத்துள்ள ஒழுக்கத்தைப்பற் றிய நுட்பமானவுணர்ச்சியே விசேஷ காரண மாம். மேலும், பிறருக்காகத் தம்முயிரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும் குணம் மனுஷரிடத்து மாத்திரமுண்டு. ஆகவே, எல்லாப்பிறப்புக்களிலும் மானிடப் பிறப்பு மேலானதாகின்றது.

இவ்வுயர்வான பதவியைப்பெற்ற பின்னும் கீழே போகாது நெறிகடைப்பிடித் தொழுகுதல் வேண்டும்

பணக் குவியலாவது புய பராக்கிரமமாவது ஒருவனை மேன்மையடையச் செய்ய மாட்டா. நீதியும் நேர்மையுமாத்திரம், ஒருவனை மேன்மைப்படுத்தும் சக்தியுள்ளவையாம்

இவ்வரிய குணங்களைப்பெறுவதற்கு ஒவ்வொருவரும் தம்மைத்தாமே அடக்கியாளுதல் வேண்டும்.

மனத்தையடக்கி ஆசையையொடுக்க ஒவ்வொருவரும் இடைவிடாது முயற்சிக்க வேண்டும்.

ஒவ்வொருவருடைய க்ஷேமமும் அவரவர் ஒழுக்கத்திற்றங்கி யிருப்பதென்பது யாவருமறிந்தவிஷயம். அன்பு, பரோபகார சிந்தை, தேசாபிமானம்முதலிய நற்குணங்களால் இவ்வுலகத்திற்கும் அதன் கண்ணுள்ள சீவராசிகட்கும் நன்மையேயன்றித் தீமைவிளைவதில்லை. ஒருவன் அறநெறி கடைப்பிடித் தொழுகுவதால் அவன் மாத்திரம் நன்மையைப்பெறுகின்றானில்லை. அவனைச்சார்ந்த யாவரும் அவன்செய்த நற்செய்கைகளாலெய்தும் பயனைப் பெறுகின்றனர். ஒருவன ஒழுக்கந்தவறி நடப்பானேல் நாசமுறுவர் ஆகவே நாம் எக்கருமத்தைச் செய்யும்போதும் பிறருக்கு அதனால் நன்மையல்லாது தீமைவிளையாதபடி கவனித்தல் வேண்டும். அஃதை மறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் அக்கிரமச் செயல்களைச் செய்யும்போது, "எங்களுடைய வெண்ணப்படி நாம் நடக்கின்றோம். நன்மையோ தீமையோவெல்லாம் நாமே அனுபவிக்கத் தயாராயிருக்கின்றோம். இதைப் பற்றி மற்றவர்கட்கென்ன, நாம் கெட்டுப்போனால் மற்றவருக்கென்ன" வென்றும் இன்னும்பலவாறாகவும் சொல்லுகின்றனரே! அந்தோ! இவர் அறியாமை. இவ்வுலகசிருஷ்டியையாவது இயக்கத்தின் தன்மையையாவது அறிந்தவர்களிடத்து இவ்வளவு தடிப்புள்ள அறியாமை யென்னும் திரையிருக்காது.

சனங்கள் அறிவின்மையால் தப்பிதமான அபிப்பிராயங்களை ஆதாரமாகக்கொண்டு ஒழுக்கத்தினின்றும் தவறினால் அறிவுடையாரொருவன் அவர்கட்கு உண்மையை விளக்கிக் காட்டவேண்டியதவசியமாம். உண்மையையறிந்து அதை பிறருக் குபதேசிப்பதே தொழிலாகக்கொண்ட ஞானிகள் பிறருடைய அவமதிப்பைத் தூசாக மதித்து நடந்து தாமறிந்தனவற்றை உலகத்தாருக் குபதேசித்தருளினர். பிறருடைய நன்மையைக் கருதிச்சீவியாதவர் மிருகங்களிலுங்கீழானவர்களாம். லோகோபகாரமாகச் சீவித்தல் தருமமென்றறிந்து அவ்வழிச் செல்பவர் மாத்திரம் மனுஷத்தன்மை வாய்ந்தவராவர். கல்வியறிவு நைஷ்டிகம் முதலியனவற்றை ஏழைச் சனங்களைத் தாழ்ந்த சாதியாரென்றெண்ணாது அவர்களையும் எங்களுடைய சுற்றத்தார் போலவெண்ணி அன்புடன் நடாத்தல்வேண்டும். இதுவே மனுஷனுக்கழகு. இதுவே மேன்மையைத்தருவது. ஒருவனுடைய தர்மம் அவன் குடும்பத்தாரோடும், உறவினரோடும், ஊராரோடும், நிற்பதல்ல. அன்பென்னும் சந்திரனை மூலாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகக்கொண்டு தருமம் செய்பவர்க்கு எல்லையென்றில்லை. சந்திரனுடைய குளிர்ந்த கிரகணம் ஆகாசமுற்று மளாவி நிற்பதுபோல அன்புள்ளார் லோகோபகாரமான பணிசெய்வதற்குகுறிக்கப்பட்ட எல்லையில்லை

பிறரிடத்தன்பும் இரக்கமுமில்லாதவர் பாபிகளாவர். பிறருக்கு நன்மைசெய்யவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாம். ஒருவன் தன் குடும்ப சௌகர்யங்களில் மாத்திரம் கண்ணுங் கருத்துமாயிருந்து அயலவர் கதியை கிஞ்சிற்றேனும் கவனிக்காவிட்டால் அவன் ஒழுக்கமற்றவனாகின்றான். அன்போடுகொண்ட தருமம் செய்வதற்குச் செல்வம் வேண்டியதில்லை. பிறர் படும் துன்பத்தைக் கண்டுமனமிரங்கி அத்துன்பத்தை நீக்க முயற்சித்தலே சிறந்த தருமம். இவ்வித கருணையுள்ளவர்கட்குஒருபோதும் குறைவுவரமாட்டாது. பகவானுடைய கடாட்சம்பெற்று வாழக்கூடியவர் யாரெனில் தமக்கும் பிறர்க்கும் வித்தியாசங் காணாதவரே. எப்படியெனில், பிறர்க்கு வந்த துன்பம்தமக்கு வந்ததுபோலவெண்ணித் தம்மை மறந்துநின்று உதவிபுரிவாரும், உடல் பொருள் ஆவிமூன்றையும் பிறர்க்குப்பணி செய்வதற்கென்று தத்தம் பண்ணினவர்களும், உண்மையில் உத்தமர்களாம். கடவுள் முன்னிலையில் ஒழுக்கமுடையவர் மேலாகவும் ஒழுக்கமற்றவர் கீழாகவும் மதிக்கப்படுவாரன்றிச் செல்வர் சிங்காசனத்தேறுவதும், வறியோர் கட்டாந் தரையிலுட்காருவதுமல்ல. இதையாவரும் நன்கு அறிந்து உணர்ந்து உண்மையைக்கண்டு அவ்வழிச் செல்லுதல் வேண்டும்.

ஆனதுபோலவே, தாம் நயம்பெறவேண்டி ஒருதேசத்தார் இன்னொரு தேசத்தாரைத் தம

தாணையின்கீழ் வைத்திருந்தால் அதுவும் தருமமாகாது. முன்னேற்றமடைந்தோர் முன்னேற்றமடையாத தேசத்தாரைத் தமதாணையின்கீழ் வைத்திருந்தால் அத்தேசத்தாரைத் தம்முடைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு முயலவேண்டும். மேலும், சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கும் முடிபுனைந்த மன்னன் தாம் பிரசைகளினின்றும் பெரியோனென்றெண்ணுவது ஒழுக்கமின்மையாம். ஏனெனில், அரசன் பிரசைகளின் ஊழியக்காரனும். அதிகாரம் பெற்றிருப்பவர் தம்மிடத்துள்ள அதிகாரத்தைப் பிறருக்கு நன்மை பயக்கும் வழிகளிலுபயோகிக்கவேண்டும். தருமநெறியை அஸ்திபாரமாகக் கொள்ளாததும் பரோபகார சிந்தையற்றதுமான குடியரசு அதிராச்சியத்திலும் கொடியதாம். அதிராச்சியமென்பது, அரசன் தான் நினைத்தவண்ணம் பரிபாலிக்கும் அரசு பிறரைப் பாதுகாத்தல் தருமநெறிபற்றிய வொழுக்கம், அதனுல் உலகம் எவ்வளவு க்ஷேமமடையும். பிறரை வஞ்சித்தும், ஏமாற்றியும், பொருள் தேடுவதாலேயே சிலர் செல்வவந்தர்களாயும், பலர் ஏழைகளாயு மிருக்கின்றனர். இதுவே பஞ்சத்திற்குக் காரணமாம். அளவிற்குமிஞ்சி யொருவன் பொருள் தேடுவானுயின் அவன் பிறர்பொருளை யபகரிப்பவ னுவான். எங்ஙனமெனின், ஒவ்வொருவரும் தத்தமக்கு அவசியமாக வேண்டிய பொருளை மாத்திரம் சம்பாதிப்பதை விட்டு ஆசை மேலீட்டினுல் மேலதிகமாகச் சம்பாதிப்பதில் காலத்தைக்கழிக்கின்றனரன்றி பிறருடைய கதியைப்பற்றிச் சிந்திக்கின்றாரல்லர். ஆகவே, பலருக்குடையதைச் சிலர் மாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரம் அபகரித்துச் செல்வராகின்றனர். மித மிஞ்சிய பொருளைத்தேடிச் சேகரித்துவைத்து லோகோபகார விஷயமாகச் செலவு செய்யாதிருத்தல் தருமநெறிக்கு மாறான செய்கையாம்.

## மனம்போல வாழ்வு.

உலகத்தி லொவ்வொருவருக்கும் வெவ்வேறு கடமைகளிருக்கின்றன, எவராயினும் சோம்பலாக விருத்தல் தவறு. இது உன்னுடையவேலை, உன்னுடைய கடமை, உன்னுடைய வாழ்விற்விற்கும் த்ாழ்விற்கும் நீயே பாத்திரவாளி; நீ உன்னுடைய கடமையைச் செய்யத் தவறினால் அது என்றென்றைக்கும் பூர்த்தியாகாதிருக்குமே யொழிய இன்னொருவர் அதைச் செய்வது முடியாது; உன் சாயல் உன்னிடத்தன்றி வேறொருவரிடத்திலு மில்லை. இருவரை ஒரேசாயலாகச் சிருட்டிப்பதில்லை; ஆகவே, உன் கடமைகளை நீயே செய்தல் வேண்டும் என்பதாக ஒவ்வொருவருடைய மனச்சாட்சியும் சொல்லுகின்றதே. பிறருடைய நன்மையைக் கருதியே நாம் எவற்றையும் செய்தல் எங்கள் முக்கிய கடமையென்றதை முற்றிலு மறந்து தான் தனக்கு என்று நினைத்துக்கொள்ளுதல் எவ்வளவு அறியாமை

கெட்டசெய்கைகளாலன்றிக் கெட்ட எண்ணங்களாலும் பல தீமைகள் விளைகின்றன.

நோயணுகாவண்ணம் நாம் உடம்பையெவ்வளவு பாதுகாத்து வருகின்றோமோ அதேபோல எங்களுடைய மனத்திலேயும் கெட்ட வெண்ணங்கள் உதிக்காவண்ணம் பாதுகாத்து வருதல் அவசியமாம் உடம்பு சுத்தமாயிருந்தால் நோய்களணுகா, மனம் சுத்தமாயிந்தால் கெட்ட எண்ணங்களணுகா, அகத்தினழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்திற்றெரியும். ஒருவனுடைய முகவிலாசமும், தேகசுகமும், ஏனைய பிறவும், அவனுடைய மனமொன்றிலே தங்கியிருக்கின்றன. வாழ்வு, தாழ்வு, சுகம், துக்கம் முதலிய வெல்லாவற்றிற்கும், மனமே காரணமாயிருக்கின்றது. மனத்தினின்று கெட்டவெண்ணங்களை அகற்றி இகத்திற்கும் பரத்திற்கும் உறுதிப் பயனைக் கொடுக்கக்கூடிய நல்லெண்ணங்களைக் கொள்ளுதல் வேண்டும்.

எவனுயினும் ஒரு நோக்கமுமின்றி யிருப்பனேல் அவன் ஒன்றிலும் சித்திபெறமாட்டான். ஆயினும், ஒருவன் தன்னுலடையக் கூடிய பதவியைப் பெறுவதற்கு முயற்சிப்பதன்றி உயரப்பறக்க நினைந்த ஆமைபோலாகப் படாது. தான் மாத்திரம் நயம்பெற அல்லது பிறருக்குத் தீங்குவிளைக்க ஏதுவாகிய பதவியை நோக்கி யிருத்தல் ஒழுக்கத்திற்கு மாறுனதாம். ஒரு நோக்கமுமின்றிச் சீவிப்பவர் சுக்கானில்லாப் பட்குபோல அங்குமிங்கு மலைந்து திரிந்து ஒருதுறையும் சேராது என்றும் நடுக்கடலில் நிற்பர். நோக்கங்களெல்லாவற்றிலும் மெய்யன்புடன் பரமேஸ்வரனைப் பூசித்தல் மேன்மையானது, அப்பரம்பொருளிட்ட கட்டளைகளாகிய தரும சாஸ்திரங்களைக் கைக்கொண்டு லோகோபகாரமாகச் சீவித்தல் எல்லாவற்றிலும் சிறந்த வழிபாடாம். கிளியானது சொல்லிக் கொடுத்ததைச் சொல்லுவது போல அநேகர் கடவுளே! கடவுளே! என்று வாயால்மாத்திரம் சொல்லுகின்றுரன்றி மனத்தினுற் பூசிக்கின்றவர் சிலரினும் சிலரே. பரோபகார சிந்தையுடையவர்களிடத்துப் பகவானுடைய அருள் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரிகள் அதிகலாபத்தைக் கருதாமல் வியாபாரம் பண்ணுதலும் நியாயவாதிகளும் வைத்தியர்களும் தங்களிடத்து வருபவர்களுடைய க்ஷேமத்தைக் கருதிப் பாடுபடுதலுமே தருமமாம். பாபவழியாற் பொருள் சம்பாதித்த உத்தியோகத்தரிலும் கல்வியறிவில்லாத ஏழைகள் பன்மடங்கு சிறந்தவராவர். வறுமைப் பிணியாளரைக் கீழ்மக்களென்று நாம் ஒருபோது மெண்ணுதல் நீதியன்று. ஒருவனுடைய வொழுக்கமே மேன்மையைத் தருவதன்றிச் செல்வமும், உத்தியோகமும், புயபராக்கிரமமும், இவைபோன்ற ஏனைய பிறவும் ஒழுக்கமில்லாதவனை உயர்ந்தோனுக்கா. ஏழைகளுள்ளும் பல உத்தமர்களிருக்கின்றனர். ஒருவனுடைய ஒழுக்கத்தைப்பற்றி நாம் கொண்டிருக்கு மபிப்பிராயத்தைக் கூறுமுன் அவனுடைய மனம் எப்பான்மை யுளதென்பதை ஆராய்ந்தறிதல் வேண்டும். உதாரணமாக, ஒருவன் தன் முன்னிலையில் நின்று பிச்சை கேட்பவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்து அவனையவ்விடத்தைவிட் டகன்றிடச்செய்ய இன்னொருவன் அந்த யாசகன்மீது கொண்ட விரகத்தினால் நாலு அணாவைக் கொடுத்து இன்னும் வேண்டிய நேரத்தில் தன்னிடம் வந்தால் தன்னாற் கூடியது செய்யக்கூடுமென்று மெய்யன்புடன் சொல்வானாகில் அவனே யோக்கியதையும், சிவகாருண்ணியமுமுடையவனுவான். ஏழைகளையும், நோயாளரையும், காண அருவருத்து அவர்களை முன்னிலையினின்று அகற்றி விடுதற்காக ஆயிரம் பவுனைக் கொடுப்பதிலும் மெய்யன்புகொண்டு அரையணாக் கொடுப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரமடங்கு சிறந்ததாம். ஆகவே, களங்க
மற்ற மனமும்' சீவகாருண்ணியமும், ஈகை
பம், பரோபகாரசிந்தையு முடையவரிடத்து
ாத்திர முண்மையான தெய்வபக்தி காணப்
படும். அவர்கட்குள்ள ஆனந்தம் எப்பான்
மையதென்று விவரிக்கமுடியாது. பகவானு
டைய அநுக்கிரகம் வேண்டுமானல் அறநெறி
கடைப்பிடித் தொழுகுங்கள்.

மகாத்மா காந்தியடிகளின் உபதேசம்

முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியபிமான முள்ளவர்கள்

தேசநேசனை வாசிக்கின்றனர்

தமிழர் முன்னேற்றத்தைக் கருதியே

இப்பத்திரிக்கையை நடத்தி வருகின்றோம்

இதுவே

இலங்கைத் தமிழருக்குள்ள

தினசரிப் பத்திரிகை

எல்லாரும் வாசியுங்கள்

பத்திரிகையால் வரும் நஷ்டத்தை

குறைக்க வழிபாருங்கள்

## மகாத்மா காந்தியடிகளின்

சீவிய சரித்திரம்.

படத்துடன் (அச்சில்)

"தேசநேசன்"

உபபத்திராதிபர்

கு. விஜயரெத்தினமவர்கள்

எழுதியது.

விவரங்களெழுதி யறியவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAHATMA GANDHI'S

## Complete

life sketcH, writings and speeches,

**The Latest Edition**

**1000, PAGES.**

*Very cheap* *Very cheap*

**Rs. 3/15.**

*Apply to:-*

**Mr. K. WIJAYARATNAM.**

(*Sub Editor*)

**THESA NESAN OFFICE**

**COLOMBO.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE NEW UTHAYAN PUBLICATION (PVT) LTD.
15, 2nd, LANE
POWER HOUSE ROAD - JAFFNA

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| முகவுரை | 30 | வகையும் | வதையும் |
| ,, 2 | 5 | காணுதுமாய | காணுததுமாய |
| 6 | 12 | என்னும் | என்னும் பட்டத்தை |
| 7 | 27 | மிளந்து | மிழந்து |
| 9 | 12 | கூடாதென்று | கூடாததென்று |
| 11 | 1 | தென்பகையும் | தென்பதையும் |
| 11 | 28 | கூருக | கூருத |
| 11 | 29 | எல்லாக் | எல்லாச் |
| 12 | 11 | கருனை | கருணை |
| 13 | 19 | வன்பு | வன்பில்லாதவன் |
| 15 | 17 | குறிதிப் | குறுதிப் |
| 18 | 23 | ம் நிததியம | மநித்தியம். |
| 21 | 3 | மாண | மரண |
| 22 | 12 | யாளுதல் | யாழுதல் |
| 22 | 27 | முறுவர் | முறுவன் |
| 23 | 25 | வற்றை | வற்ற |
| 24 | 2 | யென்றில்லை | யொன்றில்லை |
| 26 | 30 | மாயிந்தால் | மாயிருந்தால் |
| 29 | 3 | ஈகைபம் | ஈகையும |
| ,, | 4 | ஈத்திர | மாத்திர |

✲ தந்நயம் என்றதை — தன்நயமென்று வாசிக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org